**தூத்துக்குடி மாநகராட்சி**

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சாதாரணக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

**1.** இம்மாநகராட்சி பகுதி 41வது வார்டில் உள்ள அண்ணாநகர் மங்களாபுரம் மகிழ்ச்சிபுரம் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கி வடிகால் வசதி இல்லாததால் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக சுகாதார சீர்கேடாகவும் உள்ளது. எனவே இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்)க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண். 210/08–2009

**தீர்மானம் எண்: 35**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**2.** இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து **28–10–08**ல் காலமான கிருஷ்ணன்/ முருகன் என்பவரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. **2960/–**ம் வட்டி ரூ. **2061/–** ம் மொத்தம் ரூ **5021/–**ஐ அன்னாரின் வாரிசும் மனைவியுமான திருமதி ராமலட்சுமி என்பவருக்கு பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம் ந.க.எண்.எச்2 904/2009

**தீர்மானம் எண்: 36**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**3.** இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் காவலராக பணிபுரிந்து **31–11–08**ல் ஓய்வு பெற்ற திரு எம். அந்தோணிராஜ் என்பவரின் மாத ஊதியத்தில் ரூ **20/–** வீதம் **148** மாதஙகள் பிடித்தம் செய்த சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ **2960/–** வட்டி ரூ **9547/–** மற்றும் அரசு பஙகுத் தொகை ரூ **10000/–**ம் சேர்த்து ரூ **22507/–**ஐ பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்

எச்2. 30952/08

**தீர்மானம் எண்: 37**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

4. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.1 போல்பேட்டை கதவு எண். 144டி/3, 144டி/4 சொத்திற்கு அலுவலக சொத்துவரி கேட்பு பதிவேட்டில் திரு. பிச்சையா என்ற பெயர் இருந்து வந்தது. மேற்படி கதவிலக்கம் கொண்ட சொத்திற்கு பி. பாஸ்கர் என்பவர் சமர்ப்பித்த உயில்சாசன ஆவணங்களின் படி சரிபார்க்கப்பட்டு திரு. பிச்சையா பெயரிலிருந்த சொத்துவரியினை பி. பாஸ்கர் என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

திரு. பிச்சையா என்பவரின் பிற வாரிசுதாரர்களாகிய 1) பி. கணேச சுப்பிரமணியன் (2) பி. சந்திரசேகரன் (3) பி. செல்வராஜ் ஆகிய மூவரும் மேற்படி சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததை ஆட்சேபித்து வழக்கறிஞர் மூலமாக மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். அவ்வறிவிப்பினை தொடர்ந்து மாமன்ற வழக்கறிஞரின் சட்ட கருத்துபடி மாமன்ற வழக்கறிஞர் மூலம் மாநகராட்சி சார்பாக எதிர் மனுதாரரின் வழக்கறிஞருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த வகைக்கான செலவு கட்டணம் ரூ 450/—ஐ வழங்க வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே மேற்படி தொகை வழங்க மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**குறிப்பு**: அனுமதிக்கலாம்.

அ2/21645/08

**<u>தீர்மானம் எண்: 38</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

5. தூத்துக்குடி மாநகராட்சி குடிநீர் விநியோகப் பணிகளுக்கு தேவையான வாகனம் ஒன்று வாங்கிட அரசு தன் ஆணை எண். 90 நாள் 22—05—08ல் அணையிடப்பட்டு உள்ளது. மன்றம் தனது தீர்மான எண். 408 நாள் 14—07—2008ல் அனுமதி அளித்துள்ளது. இதன் பேரில் 07—01—2009ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் தொழில்நுட்ப உறையில் மெசர்ஸ் ஆனந்தா சப்ளையர்ஸ் திண்டுக்கல் மற்றும் மெசர்ஸ் சாமி மெக்கானிக்கல் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் மதுரை நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் இவைகள் நிராகரிக்கப்பட்டு மற்ற ஒரு நிறுவனத்தின் விலைவிகித பட்டியல் உறை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

வாகனம் விநியோகம் கூண்டு கட்டும் பணி தேவையான குடிநீர் சோதனை கருவி மற்றும் உபகரணங்கள்

1) டி.வி. சுந்தரம் அன் சன்ஸ்
2) எச்.தெற்கு வெளி விதி, மதுரை ரூ 1495000

**<u>அலுவலகக் குறிப்பு</u>** :

மெசர்ஸ் டி.வி. சுந்தரம் அன் சன்ஸ் மதுரை நிறுவனத்தினர் வாகனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலராகவும் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையாகவும் தகுதி உடையதாக இருப்பதால் குடிநீர் விநியோக பணி அவசியம் கருதி இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் குடிநீர் சம்பந்தமாக இருப்பதால் டிவிஎஸ். கம்பெனி அரசு அங்கீகாரம் பெற்ற கம்பெனியாக இருப்பதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

மேலும் அரசு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 10.00 லட்சத்திற்கு மேலும் கூடுதல் செலவினம் 495000/— மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யலாம். மேலும் திருத்திய மதிப்பீடு தொகை ரூ 15.00 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

இ1/14819/08

**<u>தீர்மானம் எண்: 39</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சி மேலூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி கடந்த 31–3–2008ல் ஓய்வு பெற்ற திருமதி ச. சந்திரக்கனி என்பவர் தமது பணிக்காலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2640/– மற்றும் அதற்கான வட்டி தொகை ரூ 1572/– ஆக மொத்தம் ரூ 4212/–ஐ மேற்படியாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: சிறப்பு சேமநல நிதி தொகை ரூ 4212/–ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

சி1/30519/08

**தீர்மானம் எண்: 40**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சி பகுதி சுப்பையாபுரம் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதின் தொடர்பாக ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தக்கூடாதென அப்பகுதியில் குடியிருக்கும் திருமதி ராஜபேச்சி நாச்சியார் என்ற சந்திரா என்பவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரை முதல் பிரதிவாதியாகவும் மாநகராட்சி ஆணையரவர்கள 2வது பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் MP(MD)NO.2 /08 IN W.P. (MD) NO 10128/2008 வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேலும் மேற்படி பகுதியில் குடியிருக்கும் மற்றும் ஒரு நபரான திருமதி எம். மீனா என்பவர் மாநகராட்சி ஆணையரவர்களை முதல் பிரதிவாதியாகவும் திரு மதுனந்த் என்பவரை 2வது பிரதிவாதியாகவும் திரு ராஜாமணி என்பவரை 3வது பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் M.P.(MD) NO.1/2008 IN WP (MD) NO 10083/2008ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி இரண்டு வழக்குகளிலும் இடைக்கால தடையுத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இரு வழக்குகளிலும் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1–5168/2005

**தீர்மானம் எண்: 41**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சி பகுதி 3வது மைல் பாலம் முதல் ராஜாஜி பூங்கா வரையுள்ள நல்ல தண்ணீர் கால்வாய் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பை ரிட் மனு எண் 3415/07ன் தீர்ப்பின்படி அப்புறப்படுத்தக்கோரி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதின் பேரில் திருமதி அன்னலெட்சுமி மற்றும் ஜோதி சாமுவேல் ஆகியோர் மேற்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தக்கூடாது என மதுரை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு 4549/08 மற்றும் 4550/08 வழக்கு தொடர்ந்து தடையுத்தரவு பெற்றுள்ளா.க்ள். மேற்படி வழக்கில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தி தீர்ப்பு வரப்பெற்றுவிட்டது. மேற்படி வழக்கில் மதுரை உயர் நீதிமன்ற வழக்கறிர் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

எப்1 14765/2008

**தீர்மானம் எண்: 42**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

9 .இம்மாநகராட்சிப் பகுதி ரைஸ்மில் தெரு தொடர்ச்சியில் திருமதி எஸ் லெட்சுமி க/பெ. சுப்பையாபிள்ளை என்பவர் பொதுவழிப்பாதையில் செய்துள்ள ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி திருமதி ரமனோ தேவசகாயம் என்பவர் மாநகராட்சி ஆணையரை முதல் பிரதிவாதியாகவும் திருமதி எஸ்.லெட்சுமி என்பவரை இரண்டாம் பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில்

தொடரப்பட்ட வழக்கு எண் 8251/07ல் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜரானவகைக்கும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதிக்கலாம்.

எப்1.21309/07

**<u>தீர்மானம் எண்: 43</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

10. தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2009–10ம் வருடம் (அதாவது 1–04–2009 முதல் 31–03–2010 முடிய) அனுபவித்து கொள்ளும் உரிமம் அல்லது அதில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏலம் போகாத இனங்களை மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. 2009–2010ம் வருட ஏல அறிக்கை நிபந்தனைகள் மற்றும் அதன் தொடர்பான அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** :

1. 2008–2009ம் வருட ஏல அறிக்கையில் உள்ள ஏல இனம் எண் 10 புதிய பேருந்து நிலைய நுழைவு வாயில் அருகில் உள்ள கட்டண கழிப்பறையில் தற்போது புதியதாக கட்டப்பட்டு வரும் பாலத்தின் அருகில் புதிய சர்விஸ் ரோடு (SERVICE ROAD) வர உள்ளதால் அதனையும் மற்றும் பாளை ரோடு வணிகவளாகத்தில் மாநகராட்சி அலுவலகம் கட்டப்படவுள்ளதால் அதில் (ஏல இனம் 26) உள்ள சைக்கிள் காப்பக உரிமத்தினையும் ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்யவம் சைக்கிள் வாகன காப்பகத்திற்கு மாற்று ஏற்பாடாக புதியதாக ஜெயராஜ் ரோடு வணிகவளாகத்தில் சைக்கிள் காப்பகம் நிறுவிக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2008–2009ம் வருட ஏலஅறிக்கையில் உள்ள ஏல இனம் எண் 10ஐ தவிர மீதம் உள்ள 26 இனம் மற்றும் நவீன ஆட்டிடை கூடத்தில் (8 வார்டுகளுக்கு மட்டும்) கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இதர வார்டுகளில் பொது நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைக்குட்பட்டு ஆடு மாடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் விளம்பர உரிமம் ஆகிய 3 இனஙகள் சேர்த்து 32 இனஙகளுக்கும் மேலும் மூன்று வருடம் உரிமம் வழஙகப்பபடட சேதுபாதை மயானத்தில் பனைமரஙகளில் மகசூலை அனுபவிக்கும் உரிமம், மாநகராட்சி ராஜாஜி பூ.காவில் பலன் தரும் மரஙகளின் மகசூலை அனுபவிக்கும் உரிமை மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் பனைமரஙகள் மகசூல் அனுபவிக்கும் உரிமம் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பனை மரஙகள் தவிர இதர மரஙகள் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகிய 4 இனஙகள் சேர்த்து 36 இனஙகளில் 32 இனஙகள் ஒரு வருடகாலத்திற்கு அனுபவித்துகொள்ளும் உரிமம் மற்றும் 4 இனஙகள் மூன்று வருடம் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் அல்லது கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆகிய 36 இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிமம் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

3. 2008–2009 வருட ஏல அறிக்கையில் உள்ள நிபந்தனைகளை திருத்தம் செய்துள்ளவாறு மற்றும் சேவை வரி 12.36 சதவிகிதம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை சேர்த்து 2009–2010ம் வருட ஏல அறிக்கை நிபந்தனைகளாக அஙகீகரிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

4. 2009–2010ம் வருட ஏல அறிக்கை நிபந்தனை குறித்த புத்தகம் 300 எண்ணம் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடவும் அது வகைக்குரிய செலவு தொகையை செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

5. 2009–2010ம் வருட ஏல அறிக்கையை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதுவகைக்குரிய செலவு தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ16/1059/2009

**<u>தீர்மானம் எண்: 44</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3, 4, மற்றும் 5 அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சி பகுதி பாளையங்கோட்டை ரோட்டில் தென்பாகம் காவல் நிலையத்திற்கு எதிரே அம்பேத்கார் சிலைக்கு கீழ்புறம் தூத்துக்குடி மாநகராட்சி தூத்துக்குடி நகரம் வார்டு 2 பிளாக் 22 நகரளவு 2881/2ல் வடக்கு பகுதியில் 3 மீட்டர் விட்டமுள்ள சுற்று கம்பி வளாகத்தினுள் தந்தை பெரியார் சிலை அமைத்துக்கொள்ள மன்றம் தனது தீர்மானம் எண் 774 நாள் 26–11–2007ல் அனுமதி அளித்ததன் தொடர்ச்சியாக அரசாணை எண் 1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 02–01–2009ல் சிலை அமைப்பதற்கான அனைத்து செலவினங்களும் சிலை அமைக்கும் நிறுவனத்தினரே ஏற்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சிலை அமைத்துக்கொள்ள அனுமதித்து உத்திரவிட்டுள்ளது. எனவே மேற்படி ரவுண்டானாவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான மின்கம்பம் மற்றும் அனைத்து சோடியம் ஆவி விளக்குகளை சிலை அமைப்பு குழுவின் அவர்களது சொந்த பொறுப்பில் அமைத்தும் அருகில் இடையூறு இல்லாத இடத்தில் மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி சிலை அமைத்துக் கொள்ளவும் அதற்கான செலவினங்களை சொந்த பொறுப்பில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

இ3/25370/2008

**<u>தீர்மானம் எண்: 45</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

12 . இம்மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் 8’X8’ அளவில் தமிழ்நாடு தேயிலை நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய மேலாண்மை இயக்குனர் அவர்களின் 5–11–07ம் தேதிய கடித எண் எல்1/8675/07ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரமைப்பு ஆய்வரின் 7–3–2008ம் தேதிய அறிக்கையில் எற்கனவே 2 ஆவின் பாலகம் உள்ள இடத்தில் நடுவில் காலியாக உள்ளதால் மேற்படி காலி இடத்தில் 8’X8’ அளவில் தமிழ்நாடு தேயிலை நிறுவனத்திற்கு இட ஒதுக்கீடு செய்வதால் போக்குவரத்திற்கு இடையூறு இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி இடத்திற்கு வாடகை ரூ 900/– நிர்ணயம் செய்யலாம் என்ற வருவாய் ஆய்வரின் பரிந்துரையை ஏற்று தமிழ்நாடு தேயிலை நிறுவனத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஒப்புதல் பெற்று 8’X8’ அளவில் கடை வைக்க இட ஒதுக்கீடு செய்யவும் அதற்கு மாத வாடகை ரூ 900/– நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ6/24428/07

**<u>தீர்மானம் எண்: 46</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சிக்கு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்,46022/08–1/LA 3 நாள் 09–02–2009ம் தேதியில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு (Infra Gap Filling Fund) உள்கட்டமைப்பு ஈடு செய் நிதி 2008–2009ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (கோடியில்) | மான்யம் |
|---|---|---|---|
| 1 | நகருக்கு வரும் குடிநீர் குழாய் 1வது பைப் லைன் மெயினில் புதுக்கோட்டை ஊராட்சி பகுதியில் 400எம்எம். 10KSC PSC பைப் மாற்றி அமைக்கும் பணி | 0.50 | 0.40 |
| 2 | புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு (ஏற்கனவே அரசால் ஒரு முறை வழஙகும் மான்யம் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ | 4.75 | 0.50 |

| | | | |
|---|---|---|---|
| | 1.00 கோடி) கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. | | |

அ) மேற்படி செயல்முறை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.
ஆ) இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானம் எண் 382 நாள் 30–6–2008ல் வரிவிதிப்பு எண் 1ல் கண்ட பணிக்கு (TNVIFSL) தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி நிறுவனத்திடம் இருந்து கடன்பெற்று பணிகள் செய்ய தீர்மானித்துள்ளது. தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறையில் தெரிவித்துள்ளபடி (Infra Gap Filling Fund) உள் கட்டமைப்பு ஈடு செய் நிதியில் இருந்து மதிப்பீட்டு தொகையில் ரூ 40.00 லட்சம் மானியமாக பெற்று செயல்படுத்த மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.

இ) வரிசை எண் 1ல் கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகையில் மானியம் போக மீதம் உள்ள தொகை ரூ 10.00 லட்சம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** அ, ஆ, இ. மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/18217/08–7

**<u>தீர்மானம் எண் : 47</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

14. அ) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 20–1–09ம் தேதிய செயல்முறை ஆணை எண் 49827/08/பி3ல் இம்மாநகராட்சிக்கு கேளிக்கை வரி இழப்பீட்டு நிதி 2008–09ம் ஆண்டு கீழ் மண் சாலைகளை தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றி அமைப்பதற்கு ரூ.12.00லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆ) மேற்படி நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | குறிஞ்சிநகர் 2வது மற்றும் 3வது தெரு | 425 M | 7.00 |
| 2. | கோமதிபாய் காலனி | 575 M | 7.90 |

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) மாநகராட்சி சட்டம் எண் 6 பகுதி IVன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3) கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

இ1/2068/09

**<u>தீர்மானம் எண் : 48</u>**

அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

15. இம்மாநகராட்சி வார்டு எண் 42, பாளைரோடு மேற்கு கதவு எண் 107/06/1எச்/2 என்ற வீட்டிற்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி திருமதி பாப்புலெட்சுமி என்பவர் 14–05–2001 அன்று செலுத்திய குடிநீர்குழாய் முன்வைப்புத் தொகை ரூ.3000/–ஐ மனுதாரர் தற்போது மேற்படி புதிய குடிநீர் குழாய் இணைப்பு தேவை இல்லை என தெரிவித்துள்ளதால் மேற்படி வைப்புத் தொகை திரும்ப வழங்க கேட்டுள்ளார்.

இவ்வலுவலக புதிய குடிநீர் குழாய் இணைப்பு பதிவேடு விண்ணப்பம் எண் 2000–01ன்படி பதிவு செய்யப்பட்டுள்ள குடிநீர்குழாய் முன்வைப்புத் தொகையினை அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/14767/01

**தீர்மானம் எண்: 49**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

16. தூத்துக்குடி மாநகராட்சியில் கீழ்க்கண்ட கழிப்பிடங்களின் தண்ணீர் வசதி தனியாக கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்து தருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ராஜாஜி பூங்காவில் கழிப்பிடத்திற்கு தண்ணீர் விநியோகம் தனியாக மின்மோட்டார் அறை, கிணறு மற்றும் மின் இணைப்பு பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | எண்ணம் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின்மோட்டர் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 2 | 1.40 இலட்சம் |
| 2. | மீளவிட்டான் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின்மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 3. | தீயணைப்பு துறை அருகில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 4. | ரயில் நிலையம் அருகில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 5. | W.G.C. சாலையில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 6. | நாடார் தெருவில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 7. | மங்களாபுரம் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 8. | செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 9. | DSF சந்திப்பில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு, மின் மோட்டார் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 10 | கந்தசாமிபுரத்தில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 2 | 1.40 இலட்சம் |
| 11. | முத்துகிருஷ்ணாபுரத்தில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 12. | பக்கிள் ஓடை பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 3 | 2.10 இலட்சம் |
| 13 | பாத்திமாநகர் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 3 | 2.10 இலட்சம் |
| 14. | ஜெயராஜ் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 15. | போல்டன்புரம் கிழக்கு, மேற்கு பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 2 | 1.40 இலட்சம் |
| 16. | புதுகிராமம் மெயின் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 17. | லெவிஞ்சிபுரம் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 2 | 1.40 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 18. | பிரையண்ட்நகர் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 19. | அம்பேத்கார் நகரில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 20 | கிருஷ்ணராஜபுரத்தில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 21 | TMB காலனியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 22 | சுடுகாடு அருகில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 23. | சின்னமணி நகரில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 24 | சுப்பையா பூங்கா பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 25. | பனிமயநகர் பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 2 | 1.40 இலட்சம் |
| 26. | இராஜாஜி பூங்காவில் மின்மோட்டார் அறை, கிணறு, மின் இணைப்பு மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 2.50 இலட்சம் |
| 27. | ஜார்ஜ் சாலையில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 28. | ஜார்ஜ்ரோடு மீனவர் அங்காடி அருகில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |
| 29. | திரேஸ்புரம் மேட்டுப்பட்டு பகுதியில் உள்ள கழிப்பிடத்தில் கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1 | 0.70 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்

இ1/2068/09

**தீர்மானம் எண்: 50**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி
நாள்: **13–02–2009**

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.